## மனநலம் காப்போம் !
## மனித நேயம் வளர்ப்போம் !!

அக்டோபர் 10 ஆம் தேதி உலக மனநல நாளில் மதுரை மாநகர் முழுவதும் ஒரு வார காலம் மனவளர்ச்சிக் குறை பற்றியதான விழிப்புணர்வு செய்திகளை துண்டு பிரதிகள் மூலம் பொதுமக்களுக்கு கொடுத்து அவர்களிடம் உறுதிமொழியும் பெற்றுக் கொண்டோம். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை மதுரையில் உள்ள லேடி டோக் கல்லூரி, வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மற்றும் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி மாணவ, மாணவியர்கள் நம்முடன் இணைந்து உற்சாகத்துடன் செய்தார்கள். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களுக்கும் மனவளர்ச்சிக் குறைந்தவர்களைப் பற்றியதான சரியான புரிந்து கொள்ளுதலையும், அவர்களுக்கு சமூகம் செய்ய வேண்டிய கடமைப் பொறுப்புக்களையும், இவர்களைப் பற்றி சமுதாயத்தில் நிலவி வரும் தவறான கண்ணோட்டங்களைப் போக்கும் வகையில் அமைந்தது. இந்நிகழ்ச்சியில் விழிப்புணர்வு வாகனத்தின் மூலம் மதுரையின் பல்வேறு பகுதிகளுக்கும் விழிப்புணர்வு செய்தி அறிவிக்கப்பட்டது.


Since 1996

**பெத்சான் சிறப்பு பள்ளி**

( மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது

3/369 - B, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.

Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662

E-mail : bethshanschool@gmail.com Facebook : bethshanschool.org


## துளி, துளியாய்



தனியார் அமைப்புகளில் வேலை செய்பவர்களின் பெற்றோர்களுக்கான தொடர் ஆலோசனை



மாணவர்களின் உடன் பிறந்தோர்களுக்கான ஆலோசனையும், வழிகாட்டுதலும்



பெண் குழந்தைகளின் பெற்றோர்க்கு மருத்துவ ஆலோசனை Dr.திருமதி.சுதாதீப் வழங்கினார்.




தேசிய அளவில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் சைக்கிள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள்



# 2014 நிகழ்வுகள்

### ஆண்டு அறிக்கை

Since 1996

**BETHSHAN**
SPECIAL SCHOOL

Treat me like a Prince . . .





**அன்புடையீர்,**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 18 ஆண்டுகளாக மதுரை, சிக்கந்தர் சாவடியில் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்பட்டு வருகிறது. பள்ளியானது தமிழக அரசின் அங்கீகாரமும் மத்திய அரசின் தேசிய அறக்கட்டளையில் பதிவுபெற்ற நிறுவனமாகவும் செயல்பட்டுவருகின்றது. கடந்த ஆண்டு முழுவதும் பள்ளியின் மூலம் பல்வேறு பணிகளை சிறப்பான முறையில் செய்து வந்துள்ளோம். அதில் நடைபெற்ற முக்கியமான சில நிகழ்வுகளை மட்டும் தொகுத்து அறிக்கையாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடை கிறேன். பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் முன்னேற்றத்தில் தொடர்ந்து பங்கு வகித்து வரும் நீங்கள் இந்த சமூகப் பணி சிறப்பான முறையில் நடைபெற்று வருவதற்கு கடவுள் உங்களையும் எங்களுடன் இணைத்திருக்கிறார் என்பதை நினைத்து கடவுளுக்கும் உங்களுக்கும் எங்களது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாங்கள் உங்களை சந்திக்கின்ற போது நீங்கள் தரும் நல்ல ஆலோசனைகளுக் காகவும், மகிழ்வுடன் நீங்கள் கொடுத்து உதவும் பொருட்களுக்காவும், இந்த குழந்தை கள் எல்லா நலனும் பெற வேண்டும் என்கிற உங்களது ஜெபங்களுக்காகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். கடவுள் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தின ருக்கும் மெய்யான ஆசிர்வதிங்களைத் தந்து ஆசிர்வதிப்பாராக. நீங்கள் காட்டும் அன்பையும், உதவியையும் இனிவரும் நாட்களிலும் தொடர்ந்து செய்திட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவசியம் குடும்பத்தோடு எமது பள்ளியை பார்வையிட்டு கடவுளின் குழந்தைகளான இந்த சிறப்புக் குழந்தைகளோடு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

நன்றி.

சமூக பணியில்,
R.ரவிக்குமார்
முதல்வர்

## Happy Christmas & New Year



04-09-2014 அன்று சமச்சீர் உணவுகளை தயாரிக்கும் முறை பற்றி நமது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், பாத்திமா கல்லூரி மாணவ மாணவியரோடு இணைந்து பல்வேறு ஊட்டசத்துள்ள உணவு வகைகளை தயாரிக்க கற்றுக் கொண்டனர்.

15-08-14 நமது பள்ளியில் சுத்தமான குடிதண்ணீர் மாணவர்களுக்கு தரும் வகையில் மதுரை ஸ்டார் ரோட்டரி சங்கம் உதவியது. சங்க நிர்வாகிகளுடன் இணைந்து முனைவர் திருமதி.விஜயலெட்சுமி ஸ்டீபன் அவர்கள் அன்றையதினம் பள்ளியில் சுதந்திரதின கொடியை ஏற்றி வைத்தார்கள்.





08-09-2014 அன்று நமது பள்ளியும், இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் இணைந்து உலக தாத்தா பாட்டி தினத்தை நமது பள்ளி மாணவர்களின் தாத்தா பாட்டிகளுக்கு சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தியது.

அக்டோபர் 10 ஆம் தேதி உலக மனநல நாளை நமது பள்ளியும், தி கேட்வே ஹோட்டலும் இணைந்து நடத்தியது. நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் திரு.சுப்பிரமணியன்,I.A.S., அவர்கள் துவக்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக மேக்ஸ் பிராப்பர்ட்டிஸின் இயக்குனர்கள் திரு.இளங்கோ பாக்யராஜ் மற்றும் திரு.ராமகிருஷ்ணா அவர்களும் கலந்து கொண்டார்கள்.






ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோர்க்கான தேசிய மையத்தின் உதவியுடன் திறன்வளர் பயிற்சியை 17-09-2014 அன்று மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சகுந்தலா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மதுரையில் உள்ள பல்வேறு கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிக்கு பிறகு நமது பள்ளி மாணவர்களிடம் தங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட கல்லூரி மாணவிகளிடம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் நம் பள்ளி மாணவர்கள்.



வருகின்ற 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளது. அதில் வாலிபால் போட்டியில் இந்திய அணியின் சார்பில் வியைாட தமிழகத்திலிருந்து நமது பள்ளி மாணவன் முத்துக்குமார் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்போட்டிகளில் சிறப்பான முறையில் விளையாடி இந்திய அணி பதக்கங்களை வென்று வர மனதார வாழ்த்துவோம்.








உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு 06-12-2014 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளியான நமது பள்ளி மாணவர் ஜே.கார்த்திக் நூலக உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அமெரிக்கன் கல்லூரியின் முதல்வர் முனைவர்.திரு.தவமணி கிறிஸ்டோபர் அவர்கள் பணி நியமன உத்தரவினை வழங்கினார்கள்.






மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற பணிநியமன விழாவில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்

## விளையாட்டு மைதானம் திறப்பு விழா



நம்முடைய மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக பள்ளி வளாகத்திற்குள் விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்காக பெரும் முயற்சி எடுத்தவர் திரு.மாணிக்கம் அவர்கள். தனக்கு தெரிந்த அநேக நண்பர்களின் உதவியின் மூலம் சிறப்பான முறையில் பள்ளி வளாகத்திற்குள் வாலிபால், கூடைப்பந்து, இறகுப்பந்து, போச்சி, மற்றும் தரை ஹாக்கி விளையாட்டுக்கள் விளையாடுவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உள்அரங்கிற்குள் விளையாடும் விளையாட்டுகளான சதுரங்கம், கேரம் விளையாட்டுக்களுக்கு தேவையான உபகரணங்களும் வழங்கினார்கள்.

## வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு




நன்றி தெரிவித்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மதுரை மாவட்ட முன்னாள் சட்டப்பணிகள் ஆணைக்குழு நீதிபதி திருமதி.ஜெஸிந்தா மார்ட்டின் அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார்கள்.

18 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சிக் குறைந்த மாற்றுத்திறனாளிகள் சிறப்பு பள்ளிகளில் சிறப்புக் கல்வியை தொடர முடியாது என்கிற உத்தரவிற்கு எதிராக நமது பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், மக்கள் பிரதிநிதிகள், மாநில மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணையர், அமைச்சர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவு ஆகியவற்றிக்கு முறையே தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை தெரியப்படுத்தினார்கள். பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று முதல் கட்டமாக மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவானது அனைத்து சட்டப்பூர்வமான உதவிகளையும், ஆலோசனைகளையும் நமக்கு கொடுத்தது நமக்கு நம்பிக்கையை தந்தது. அதைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்களையும், மாநில செயலர் மற்றும் மாநில ஆணையர் அவர்களும் இப்பிரச்சினையின் தன்மையை புரிந்து கொண்டு இரண்டு வாரங்களுக்குள்ளாக நல்லதொரு உத்தரவினை பிறப்பித்தார்கள்.

மதுரை மாவட்டத்தில் மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் உள்ள மனவளர்ச்சிக் குறைந்த மாற்றுத்திறனாளிகள் சிறப்பு பள்ளிகளில் 35 வயது வரையிலும் கல்வியை தொடர்வதற்கான உத்தரவினை தமிழக அரசு பிறப்பித்தது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இப்பிரச்சினையில் நமக்கு ஆதரவு தந்து நல்லதொரு உத்தரவு பிறப்பிக்க உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், நண்பர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப்பணிகள் ஆணைக்குழு நீதிபதி மற்றும் வழக்கறிஞர்களுக்கும், ஊடகங்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.